2006 ஆகஸ்ட் 24]

கிட்டத்தட்ட 40-க்கும் கூடுதலாகக் கால்நடைகள் சிகிச்சைக்கு வந்தாலோ, அந்தக் கிராமத்திலோ அல்லது அங்கு சுற்றியுள்ள கிராமங்களில் 10,000-க்கும் மேற்பட்ட கால்நடைகள் இருந்தாலோதான் கால்நடை மருத்துவமனை அமைக்க இயலும். ஆதலால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை, அதற்கேற்ப அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 90, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. எதிரொலி மணியன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

90—

கால்நடை துணை மருத்துவமனை

***1158—திரு. கோ. எதிரொலி மணியன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், கீழ்வெள்ளியூர் கிராமத்தில் கால்நடை துணை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், தெள்ளாறு ஊராட்சி ஒன்றியம், கீழ்வெள்ளியூர் கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் துவக்க தற்போது அரசுத் தரப்பில் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

திரு. கோ. எதிரொலி மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைகளைப் பராமரிப்பதற்குத் தற்போது ஒன்றியங்களிலே இருக்கின்ற கால்நடை மருத்துவமனைகள், துணை மருத்துவமனைகள் அதிகப்படுத்த முடியாத இந்தச் சூழநிலையில் ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே ஓர் ஒன்றியத்திற்கு ஒரு கால்நடை விரிவாக்க அலுவலரை நியமித்து, அவரிடம் 10,000 ரூபாய் மதிப்புள்ள மருந்துகளைக் கொடுத்து, அந்த ஒன்றியத்திற்குட்பட்ட அனைத்துக் கிராமங்களுக்கும் அந்தப் பணியாளர்கள் நேரடியாகச் சென்று கால்நடைகளுக்குத் தடுப்பூசி

போடுதல், சினையூட்டல் பணியைச் செய்தல், குடற்புழு நீக்குதல், மக்கள் தொடர்பு முகாம் நடத்தச் செய்தல், தீவன வளர்ப்புபற்றிப் பயிற்சி அளித்தல் ஆகிய பணிகளைச் செய்து கொண்டிருந்தார்கள். கடந்தகால ஆட்சியிலே 2004-இல் அந்தப் பணிகளையெல்லாம் செய்தவர்கள் நீக்கப்பட்டிருக்கிறார்கள். ஊரக வளர்ச்சித் துறையின்கீழ் இருந்த அந்தப் பணியாளர்கள் மீண்டும் நியமனம் செய்யப்படுவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதற்கட்டமாக காலியாக உள்ள கால்நடை மருத்துவர்கள் பணியிடங்களில் எல்லாம் நியமனம் செய்யப்பட்டு, அவை நிரப்பப்பட்டபின், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா.

திரு. தி.க. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், எனது திருப்பத்தூர் தொகுதியிலே, ஜவ்வாது மலையிலே, புதூர்நாடு, புங்கம்பட்டுநாடு, நெல்லிவாசல்நாடு என்று மூன்று ஊராட்சிகள் இருக்கின்றன. அவற்றிலே 32 மலைக் கிராமங்கள் இருக்கின்றன. அங்கே வாழ்கின்ற மலைவாழ் மக்கள் எல்லாம் தங்களுடைய துணை வருவாயாக ஆடு, மாடு, கோழிகளை வளர்த்து வருவாயை ஈட்டி வருகிறார்கள். அங்கே 50 கிலோ மீட்டர் தூரத்திற்கு மருத்துவமனை என்பதே இல்லை. ஏலகிரி மலையிலிருந்துதான் நடமாடும் கால்நடை மருத்துவமனை, வாரத்திற்கு ஒரு நாள் செல்வதால், அந்தக் கால்நடைகளுடைய நோய்களைத் தீர்க்க வசதியில்லாமல் இருக்கிறது. அரசு விதிக்குட்பட்டு, 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் இருந்தும், 50 கிலோ மீட்டர் விஸ்தீரணத்திலே கால்நடை மருத்துவமனை இல்லாத காரணத்தினாலே, புதூர்நாட்டிலே ஒரு கால்நடை மருத்துவமனை அமைத்துத்தர அரசு முன்வருமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–20

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை, அரசு விதிமுறைகளுக்கு உட்பட்டு, அங்கு 3,000-க்குமேலே கால்நடைகள் இருந்தால்கூட, நிச்சயமாக இந்த அரசு பரிசீலனை செய்யும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

2006 ஆகஸ்ட் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. சிறப்புக் கவன ஈர்ப்பு

சென்னை, மூன்றாவது இருப்புப் பாதை அமைக்கும் பணியால் பாதிக்கப்படுவோருக்கு மாற்று இட வசதி அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு மற்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம் ஆகியோர் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். இது சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு. (குறுக்கீடு) உட்காருங்கள்.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்திப்பட்டு மூன்றாம் இரயில்வே திட்டப் பகுதி விரிவுபடுத்தப்படுகின்ற நிலையில், இன்றைக்கு அந்தப் பகுதியிலே குடியிருந்து வருகின்ற, ஓலைக் குடிசையிலே குடியிருந்து வருகின்ற, 30, 40 ஆண்டுகளுக்கு மேலாக அந்தப் பகுதியிலே வாழ்ந்து வருகின்ற மக்களை, திடீரென்று 26 ஆம் தேதி என்று தேதியைக் குறிப்பிட்டு, உடனடியாக அந்தப் பகுதியிலேயிருந்து காலி செய்ய வேண்டும்; அல்லது இரயில்வே துறையின்மூலமாக அகற்றப்படுவீர்கள் என்ற notice-ஐ வழங்கியிருக்கிறார்கள். இதேபோன்ற ஒரு நிலை, கடந்த 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலே ஒரு notice-ஐ இரயில்வே துறை வழங்கியது. அன்றைக்கு ஆட்சியிலே இருந்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள், உடனடியாக அந்த இரயில்வே விரிவாக்கப் பகுதியிலே பாதிக்கப்படுகின்ற 140 குடும்பத்தினருக்கும், அருகிலே அன்றையதினம் கட்டப்பட்டுக் கொண்டிருந்த பாரதி நகர் குடியிருப்புப் பகுதியில், மாற்றுக் குடியிருப்பு வசதியைச் செய்து தந்து, அந்த மக்களின் மனதில் பாலை வார்த்தார்கள். இன்றைக்கும் அந்த மக்கள் பெருமளவிற்குப் பதற்றத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். இன்றைக்கும் அதே பகுதியில், பாரதி நகர்ப் பகுதியில், 108 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் தீட்டப்பட்ட திட்டம், ஒதுக்கிய நிதியின் வாயிலாகக் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றது. அந்தத் திட்டப் பகுதியில் இப்போது